BSNL ஊழியர் சங்கம்
தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:139 **தேதி:-08.11.2016.**

மாநில மையக் கூட்ட முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில மையக் கூட்டம், சென்னை க்ரீம்ஸ் சாலையில் உள்ள சங்க அலுவலகத்தில் 08.11.2016 அன்று தமிழ் மாநில தலைவரும், அகில இந்திய உதவி பொது செயலாளருமான தோழர் S.செல்லப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தோழர் S.செல்லப்பாவுடன் தோழர் T.பிரேமாCVP, தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன்CS, தோழர் M.முருகையா ACS, தோழர் K.சீனிவாசன் CT மற்றும் தோழர் R.மகேந்திரன்CAT ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:-

1) சென்னை CGM அலுவலகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட 11 ஒப்பந்த தொழிலாளர்களை உடனடியாக மீண்டும் பணியமர்த்த வேண்டும் என்ற கோரிக்கைக்காக நடைபெற உள்ள 10.11.2016 பெருந்திரள் முறையீடு போராட்டம் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. அன்றைய தினம் தலைமை பொது மேலாளர் திருச்சியில் ஒரு நிகழ்ச்சிக்கு செல்ல இருப்பதாக அவரது அலுவலகத்தில் இருந்து தகவல் வந்தது. அதன் அடிப்படையில் அந்த போராட்டத்தை 18.11.2016 அன்று நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. மேலும் நவம்பர் 16 மற்றும் 17ஆம் தேதிகளில் பாதிக்கப்பட்ட ஒப்பந்த ஊழியர்களுடன், CGM அலுவலக மாவட்ட சங்க நிர்வாகிகளும் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. தமிழகம் முழுவதும் இருந்து மிகப்பெரிய அளவில் 18.11.2016 அன்றைய பெருந்திரள் முறையீட்டிற்கு தோழர்களை திரட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

2) BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அகில இந்திய மாநாட்டு நிதியை அனைத்து மாவட்ட சங்கங்களும் நவம்பர் 30ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

3) BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அகில இந்திய மாநாட்டில் வெளியிட உள்ள பொதுத்துறை பாதுகாப்பு சிறப்பு மலருக்கான விளம்பரங்களை டிசம்பர் 10ஆம் தேதிக்குள் மாவட்ட சங்கங்கள், மாநில சங்கத்திற்கு அனுப்பிட வேண்டும்.

4) BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அகில இந்திய மாநாட்டினை ஒட்டி டிசம்பர் 8ஆம் தேதியன்று அனைத்து கிளைகளிலும் BSNL ஊழியர் சங்கத்தின் 8 கொடிகளை

விமரிசையாக அலங்கரித்து, கொடியேற்றி தோழர் K.G.போஸ் நினைவு நாளாக கொண்டாடிட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

5) டிசம்பர் 8ஆம் தேதி தமிழகத்தின் 9 மையங்களில் சிறப்புக் கருத்தரங்கம் நடத்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதில் கீழ்கண்ட தோழர்கள் பங்கேற்க உள்ளனர்.

எண்	இடம்	பங்கேற்போர்
1	கோவை	தோழர் P.இந்திராACS & தோழர் P.சம்பத் தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணி
2	பாண்டிச்சேரி	தோழர் S.செல்லப்பா AGS & தோழர் மதுக்கூர் ராமலிங்கம் தமுஎகச
3	கடலூர்	தோழர் S.செல்லப்பா AGS & தோழர் மதுக்கூர் ராமலிங்கம் தமுஎகச
4	சேலம்	தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் CS & தோழர் R.கருமலையான் CITU
5	மதுரை	தோழர் M.முருகையா ACS & தோழர் K.சுவாமிநாதன் AIIEA
6	திருச்சி	தோழர் V.வெங்கட்ராமன் CVP & தோழர் M.கிரிஜா AIIEA
7	திருநெல்வேலி	தோழர் S.சுப்பிரமணியன் ACS & தோழர் S.முத்துக்கண்ணன் DYFI
8	வேலூர்	தோழர் R.மகேந்திரன் CAT & தோழர் S.கண்ணன் CITU
9	நாகர்கோவில்	தோழர் R.M.கிறிஸ்டோபர் COS & தோழர் முத்துநிலவன் தமுஎகச

6) தமிழ் மாநில கவுன்சில் உறுப்பினர்களாக BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக தோழர்கள் S.செல்லப்பா, A.பாபு ராதாகிருஷ்ணன், M.முருகையா, P.இந்திரா, E.கோபால், K.சீனிவாசன், C.செல்வின் சத்யராஜ், S.சுப்பிரமணியன் மற்றும் S.மகேஸ்வரன்(கோவை) ஆகிய தோழர்களை நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ் மாநில செயலகக் கூட்டத்தின் முடிவுகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என தோழர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்